Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-6**

Name : ஏழுமலை
Father / Husband name : இரங்கநாதன்
Village : கொள்ளார்
Age : 57
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.04.2026

Accused present. Both side counsel present. E summon not served. Witness identified Roshanai PS HC 2735 Palanivel.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது டிரைவர் வேலை செய்கிறேன். அ.சா.1 பாஸ்கரன் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், எனது சித்தப்பா மகன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்தவிவரமும் தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமகா என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 14.11.2023 அன்று மதியம் 03.10 மணிக்கு எங்கள் ஊரிலுள்ள பேருந்து நிறுத்தம் அருகே நானும் விஜயக்குமார் ஆகியோர் நின்றிருந்தபோது எங்கள் கிராமத்தை சேர்ந்த ஞானபிரகாசம் என்பவரை எத்திராஜிடம் ரோட்டில் சண்டைபோட்டிருந்தார் என்றும், அப்போது மதியம் 03.30 மணியளவில் அப்போது செஞ்சி மார்க்கத்திலிருந்த வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மேற்படி சண்டையை பார்த்துவிட்டு சண்டை ரோட்டில் போடாதீகள் என்றும், வீட்டிற்கு செல்லுமாறு சொன்னபோது ஞானபிரகாசம் உதவி ஆய்வாளரை அசிங்கமாக திட்டி, எங்க குடும்ப சண்டையை நீ ஏண்டா வந்த

மறிக்கிற என்று சொல்லி கையால் உதவி ஆய்வாளர் வலது கன்னத்தில் அடித்து அவரை அசிங்கமாக திட்டி உன்னை கொலை செய்யாமல்விடமாட்டேன் என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டார் என்று போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது சித்தப்பா மகன் என்பதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த சமயத்தில் நான் அந்தயிடத்தில் இல்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.